# இரண்டாம் மொழியாக சிங்கள மொழியை கற்பதில் எதிர்கொள்ளும் சவால்கள்: சம்மாந்துறைப்பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

A.M.M. Aaqil

Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language
South Eastern University of Sri Lanka
mohammedaaqil1995@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மொழி ஒருவரின் சிந்தனைகளையும், கருத்துக்களையும் மற்றொருவருக்கு தெரிவிக்கும் மிகச் சிறந்த ஊடகமாகும். இலங்கையில் சிங்களம்,தமிழ்,ஆங்கிலம் போன்ற மொழிகள் பேசப்பட்ட போதிலும் சிங்கள மொழியே பெரும்பான்மை மொழியாகவும் அரச மொழியாகவும் காணப்படுகின்றது. அந்தவகையில் இரண்டாம் மொழியாக சிங்களத்தினை கற்றுக்கொள்வதில் மாணவர்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். இச்சவால்களை இனங்கண்டு அவற்றிற்கான தீர்வுகளை முன்வைப்பதே இவ் ஆய்வின் நோக்கமாகும். ஆய்வுப் பிரதேசத்தில் இவ்வாறானதோர் ஆய்வு இடம்பெறவில்லை என்ற அடிப்படையில் ஆய்வு இடைவெளியை குறைநிரப்புவதில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் தரவுமூலாதாரங்களினைப் பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் நிலைத்தரவுகள் வினாக்கொத்து, நேர்காணல் மூலமும் இரண்டாம் நிலைத்தரவுகள் நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம், பத்திரிகைகள், ஆக்கங்கள் மூலமும் பெறப்பட்டுள்ளன. வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகள் Excel package என்ற மென்பொருளின் துனையுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் சிங்களம் தொடர்பான முன்னறிவின்மை, பேசுவது மற்றும் விளங்கிக் கொள்வதில் சிரமம், எழுத்துக்களிள் குழப்பம் போன்ற பிரச்சினைகளை மாணவர்கள் எதிர்கொள்வதாக ஆய்வாளர் கண்டறிந்துள்ளதுடன் அதற்கான முன்மொழிவுகளையும் வழங்கியுள்ளார்.

**திறவுச் சொற்கள்** : இரண்டாம் மொழி, சிங்களம், சவால்கள்

.

## ஆய்வு அறிமுகம்

தகவல்களை பரிமாற்றம் செய்வதற்காக மனிதன் பயன்படுத்துகின்ற ஒரு ஊடகமாக மொழி காணப்படுகின்றது அதேவேளை மொழியானது சமுதாயத்தை பிரதிபலிக்கின்ற கண்ணாடியாகவும் தொழிற்படுகின்றது. மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் தான் வாழும் சூழல் மற்றும் இயல்பு நிலைக்கமைய தமது பண்புகளையும் கருத்துக்களையும் பரிமாற்றம் செய்ய மொழியை ஊடகமாக பயன்படுத்துகின்றனர். உலகலாவிய ரீதியில் சுமார் 7102 மொழிகள் காணப்படுகின்றன (குலசேகரம் சஞ்சயன் 2018). இவற்றில் பல மொழிகள் தத்தமது நாடுகளில் அரச மொழியாக பேசப்படுகின்றன.

இந்த வகையில் பல்லின மக்கள் வாழும் இலங்கை நாட்டிலே பெரும்பான்மை மொழியாக சிங்களமே காணப்படுகின்றது. இது அரச மொழியாகவும் காணப்படுவதனை நோக்கமுடிகிறது அந்த வகையில் ஆய்வுப்பிரதேசமான சம்மாந்துறை கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ளது. பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழும் இப்பிரதேசம் தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்ட பிரதேசமாகும். அதேவேளை கல்வி, பொருளாதாரம் மற்றும் விவசாயம் போன்றவற்றில் தன்னிறைவு பெற்ற ஓர் பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

கல்வியல் ரீதியில் நோக்கும் போது ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்கல்வி வரையும், பல்கலைக்கழக நுழைவும் சிறப்பானதொரு அடைவு நிலையை அடைந்த சம்மாந்துறை பிரதேசத்தில் உயர்கல்வியை கற்று பல்கலைக்கழக நுழைவுக்கு தேர்ச்சி பெற்ற 2015/2016 மாணவ, மாணவிகள் அண்மைக்காலமாக பல்கலைக்கழகத்திலுள்ள ஒரு தெரிவுப்பாடமாகவும் பிரதான பாடமாகவும் காணப்படுகின்ற இரண்டாம் மொழி சிங்கள மொழியை கற்பதில் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். இத்தகைய சவால்களானது அம்மாணவர்களது கல்வி நிலையில் ஏற்படுத்திய தாக்கங்களையும், அதன் மூலம் அவர்கள் எதிர் நோக்கிய சவால்களையும் கண்டறிந்து அத்தகைய சவால்களை தீர்க்கும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

**பிரதான நோக்கம் :**

சம்மாந்துறைப்பிரதேசத்தில் தமிழ்மொழியை தாய்மொழியாகக் கொண்ட 2015/2016 ம் கல்வியாண்டு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குச் சென்று இரண்டாம் மொழியாக சிங்கள மொழியை கற்றுக் கொள்வதில் எதிர்நோக்கும் சவால்களை கண்டறிதல்.

**உப நோக்கங்கள் :**

- சிங்கள மொழி ஒரு பாடமாக கற்கும் மாணவர்களது மனோநிலை பற்றி அறிதல்.
- சிங்கள மொழிக்கும் ஏனைய பாடங்களுக்குமிடையில் மாணவர்கள் கற்கின்ற வீதத்தில் காணப்படுகின்ற வேறுபாடுகளை இணங்கானல்.
- சிங்கள மொழியை கற்பதனால் அம்மானவர்கள் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறிந்து அதற்கான தீர்வுகளை முன்வைத்தல்.

**ஆய்வுப்பிரச்சினை**

சிங்களம் பெரும்பான்மைமொழியாக பேசப்படுகின்ற இந்நாட்டில் அதனை கற்றுக் கொள்வது ஒவ்வொரு பிரஜைக்கும் அத்தியவசியமாகும். எனினும் பல்கலைகழகத்தில் இரண்டாம் மொழியான சிங்களத்தை கட்டாயபாடமாக எடுக்கும் மாணவர்கள் நிர்ப்பந்ததுடன் எடுப்பதும், தெரிவுப்பாடமாக உள்ள மாணவர்கள் அதனை விடுத்து ஏனைய பாடங்களை எடுப்பதுவே ஆய்வுப்பிரச்சினையாக கொள்ளப்பட்டது.

**ஆய்வின் முக்கியத்துவம்**

இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினைகளுக்கு மொழிப்பிரச்சினையும் ஓர் அடிப்படைக்காரணமாகும். எனவே சிஙகள மொழியை கற்றுக் கொள்வதனூடாக சக மதத்தவர்களுடன் பரஸ்பர உறவை ஏற்படுத்தமுடியும். அதேவேளை பல்கலைக்கழக கல்வி தொழில்வாய்ப்பின் உந்து சக்தியாக தொழிற்படுவதால் தொழில்வாய்ப்பிற்கு சிங்கள மொழியின் அவசியம் உணரப்படுகின்றது. இவற்றை மாணவர்களுக்கு முன்வைப்பதனூடாக எனது ஆய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

**ஆய்வு முறையியல்**

ஆய்வொன்றை மேற்கொள்ளும் போது ஆய்வுடன் தொடர்புடைய தரவுகள் இன்றியமையாததாகும். இந்த வகையில் ‘‘இரண்டாம் மொழியாக சிங்கள மொழியை கற்பதில் எதிர்கொள்ளும் சவால்கள்’’ எனும் தலைப்பிலான இவ்வாய்வானது அளவு ரீதியானதும், பண்பு ரீதியானதுமான தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

இந்த வகையில் முதலாம் நிலைத் தரவாக வினாக் கொத்து, நேர்கானல், அவதானம், இலக்கு குழு கலந்துரையாடல் போன்ற முறைகளினுடாக தரவுகள் பெறப்பட்டன.

வினாக்கொத்து

20 = FAC Student

50 - 10 = FMC Student


20 = FIA Student

கலந்துரையாடல்கள்


இலக்கு குழு கலந்துரையாடல்கள் - 3

இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வு அறிக்கைகள், இணையதளங்கள், கட்டுரைகள் என்பவற்றினூடாக தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.


**பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**




உரு 1




உரு




உரு 3

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அனைவரும் கிழக்குமாகாணத்தில் சம்மாந்துறை பிரதேசத்தை சேர்ந்தவர்களாகவும் பல்கலைக்கழக மாணவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் சிங்களத்தை பிரதான பாடமாகவும் தெரிவுப்பாடமாகவும் கற்பவர்களாக காணப்டுகின்றனர் இதில் 60% ஆனோர் பிரதான பாடமாகவும் 40% வீதமானோர் தெரிவுப்பாடமாகவும் சிங்களத்தை கற்கின்றனர். எனவே இதில் பெரும்பான்மையானோர் சிங்கள மொழியை கற்கவே வேண்டும் என்ற நிலைப்பாட்டல் உள்ளனர். இவ்வாறாக கற்கும் மாணவர்களில் 87% வீதமான மாணவர்கள் இம்மொழியை கற்பதில் விருப்பமுள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். அதிலும் 13% ஆனோர் தமக்கு இம்மொழியை கற்றுக்கொள்வதற்கு விருப்பமில்லை எனக்குறிப்பிட்டுள்ளனர். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்கள் இம்மொழியை கற்பதற்கான நோக்கங்களை வரைபடம் 3 தெளிவுபடுத்துகின்றது. இதில் 73% வீதமான மாணவர்கள் மொழிபற்றிய அறிவைப் பெறறுக்கொள்ள வேண்டும் என்பதற்காக இம்மொழியை கற்பதாக குறிப்பிட்டுள்ளனர். அதேவேளை 20% வீதமானோர் தொழில்வாய்பை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக இம்இம்மொழியை கற்பதாகவும், 07% வீதமானோர் சிங்களவர்களுடன் சகஜமாக உரையாட வேண்டும் என்பதற்காகவும் தமக்குள் பரஸ்பர உறவைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காக இம்மொழியை கற்பதாக குறிப்பிடுகின்றனர். மேலே உள்ள வரைபடங்களை அவதானிக்கும் பொழுது அதிகமாணவர்களுக்கு சிங்கள மொழியை கற்க வேண்டும் என்ற ஆர்வம் இருப்பதுடன்

அதிலும் பெரும்பான்மையோர் மொழியறிவை பெற வேண்டும் என்பதற்காக கற்பதும் தெளிவாகின்றது.

**பிரச்சினைகளும் சவால்களும்**

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்கள் சிங்கள மொழியை கற்பதில் பல பிரச்சினைகளை எதிர்கொள்வதாக கூறி இருந்தனர் அவற்றில் பெரும்பான்மையானோர் பின்வரும் காரணங்களை குறிப்பிட்டிருந்தனர்.

01. சிங்களம் தொடர்பான முன்னறிவின்மை – 95%

02. பேசுவதில் சிரமம், உரையாடுதல் சிரமம் - 98%

03. விளங்கிக் கொள்வதில் சிரமம் - 90%

04. எழுத்துக்களில் குழப்பம் - 30 %

05. தயக்கம் - 70 %

06. ஆர்வமின்மை - 58 %

07. இலகுவில் எழுதுவது கடினம்- 20 %


08. அறிமுகமற்ற மொழிப்பிரயோகம் - 40 %

09. விரிவுரையாளருடன் உரையாடுவது கடினம் 35 %

**1. சிங்களம் தொடர்பான முன்னறிவின்மை**


ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களுல் 73% வீதமானோர் பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழியை கற்பதற்கு முன்னர் வேறெங்கும் கற்றுக்கொள்ளாதவராக காணப்படுகின்றனர் அதே போல் 33% வீதமான மாணவர்களே சாதாரணதரத்தில் சிங்களத்தை ஒரு பாடமாக கற்றுள்ளனர். ஏனையோருக்கு சிங்களம் தொடர்பான அறிவு முன்னர் காணப்படவில்லை. இதனால் பல்கலையில் கற்கும் போது சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

**2. பேசுவதில், உரையாடுவதில் சிரமம்**





ஆய்வுக்குட்படுத்தப்பட்டோரில் 93% ஆனோர் பேசுவது மற்றும் உரையாடுவதில் இப்பிரச்சினையை அனுபவிக்கின்றனர் அதேவேளை 7% ஆனோர் எழுதுவதில் பிரச்சினைகள் உள்ளதனை குறிப்பிடுகின்றனர்.

3. **வாசித்தல்**




ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனைவரும் ஓரளவிற்கேனும் வாசிக்க தெரிந்தவர்களாக காணப்படுகின்றனர். 13% பேர் மிக நன்றாகவும் 34% வீதமானோர் நன்றாகவும் 53% ஓரளவிற்கேனும் வாசிக்க தெரிந்தவர்களாக உள்ளனர்.

4. **எழுதுதல்**




ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனைவரும் எழுதுவதில் ஆர்வமாக காணப்படுகின்றனர். இதில் 13% வீதமானோர் மிக நன்றாகவும் 54% வீதமானோர் நன்றாகவும் 33% வீதமானோர் ஓரளவிற்கேனும் எழுதத் தெரிந்தவர்களாக காணப் படுகின்றனர். இவ்வாறாக பல்வேறுபட்ட சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

இந்த ஆய்வினைப் பொருத்தவரையில் இது முதன் முயற்சி என்றே கூறலாம். இரண்டாம் மொழி தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படினும் மாணவர்கள் சார்ந்த சிக்கல்கள் தொடர்பாக ஆய்வுகள் இடம்பெறவில்லை. எனவே மாணவர்கள் கருத்தூன்றிக் கற்க வேண்டும் புதிய மொழி ஒன்றினைக் கற்கப் போகின்ற எண்ணத்தோடு செயற்பட்டால் இரண்டாம் மொழியான சிங்கள மொழியினை இலகுவாக எழுதவும், உச்சரிக்கவும், கதைக்கவும் முடியும். வயது- தொழில் ரீதியான வேறுபாடுகளைத் தவிர்த்து சிங்கள மொழியினைக் கற்கும் காலத்தினை நீட்டிச் செல்லாமல் முயன்று கற்றலும், கற்பித்தலில் புதிய முறைகளை முன்வைக்கின்ற போது மாணவர்கள் விருப்பத்தோடு எவ்வித சிக்கலும் இன்றி கற்க முனைவர். குறிப்பாக மாணவர்களுக்கு சிங்கள மொழியை கற்பிக்கும் பொழுது அனைவரையும் ஒன்றாக வைத்து கற்பிக்காமல் மாணவர்களின் சிங்கள மொழியுடனான பரீட்சயத்திற்கேற்ப குழுக்களாக பிரித்து கற்பிக்க வேண்டும்.

## References


- புஞ்சிஹேவா, எஸ்.ஜீ. (2012), சீ வருநாதன், ச. (மொழிபெயர்ப்பு,2012) கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் (LLRC). மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். கொழும்பு 07

- O’ Malley, J.M.,and Chamot, A.U., Learning Strategies in Second Language Acquisition,Cambridge University Press: Cambridge,1995.

- Madeline E.Ehrman, 1996, Understanding Second Language Learning Difficulties: http://www.amazan.com

- Saadhiya, M.A.S.F., & Mafaz, M.S.M. (2016). சிங்கள மாணவர்கள் இரண்டாம் மொழியாகத் தமிழை கற்பதில் உள்ள சிக்கல்களும் அவற்றுக்கான தீர்வுகளும். *South Eastern University Arts Research Session*

- சஞ்சயன், K.,(2018), ‘இன்று உலக தாய்மொழி நாள் - 2018’ Retrived From https://www.sbs.com.au/language/tamil/international-mother-language-day-21-february